# பாவம் மணி!

நம் நாட்டுப் பெரியார் ஒருவர் சொல்லியிருக்கிறார்: "'இரண்டுங்கெட்டான்' என்பதற்குச் சரியான உவமை பதினாலு வயசுப் பையன்!" என்று.

ஆம். உண்மை; பதின்மூன்று வயதிலிருந்து, பதினாறு வயதுவரை பிள்ளைகளின் போக்கே ஒரு விசித்திரமாயிருக்கும். பதினாலு, பதினைந்து பிராயத்திலே, அவர்களை 'இரண்டுங்கெட்டான் என்று சொல்வதைத் தவிர வேறு வர்ணனை ஏதும் சரிப்படாது.

சமர்த்து, சாது, என்று கொண்டாடப்பட்ட மணியே - வயதுக்கோளாறினால் - பொல்லாப்புக்கு இலக்கானானே! பெரியவர்கள் கூற்றுக்குச் சான்று வேறு என்ன வேண்டும்?மணியின் வயது சரியாக ஈரேழு. ஈரேழு புவனங்களைப்போலவே, அவனும் விதவித நிலைகளில் இருக்கத் தொடங்கினான். மறையாத பிள்ளைத்தனம், ஊன்றாத வாலிபம், இரண்டும் லேசாக உறையாடிக்கொண்டிருந்தன அவனிடத்திலே. காற்றாடிபோல, விதவிதமான நிலைகளிலே, பல பல விதமாக, துவளும், துள்ளும், துடிக்கும், அவன் உள்ளம். மணியிடம் குடிகொண்டிருந்த குழந்தைத்தனமும், பொறுப்பு உணர்ச்சியும் அவனைப் பலவிதமாக ஆட்டி வைத்தன.

வேலையாள் சரியாக வேலை செய்யாவிட்டால், அப்பா கோபித்தால் போதாதா? மணிக்கும் கோபம் வரத் தொடங்கியது. வேலையாளைக் கடிந்து கொள்வான், வீறாப்பு பேசி, அதட்டுவான்.

"உனக்கு ஏன் அந்த வம்பு, பொல்லாப்பு?" என்று அப்பா கேட்டால், "எனக்கும் வேணும்தான் அக்கரை!" என்றே பதில் விடுப்பான்.

"சின்னவனோடு உனக்கென்னடா போட்டி! விட்டுத்தள்ளு! எந்த அலமாரியில் புத்தகத்தை வைத்துக்கொண்டால் என்ன?" என்று அன்னையின் கேள்வி வந்தால், "அதென்ன அக்கிரமம்! எனக்குப் பொறுக்காது, வீட்டிலே சின்னவர்கள் அதிகாரம் பறந்தால்!" என்று மணியின் பதிலும் பறக்கும்.

மணியின் போக்கு, வீட்டிலே எல்லோருடைய கவனத்தையும் பிணைப்பதாயிருந்தது. பெரியவர்களோ, சின்னவர்களோ எல்லோருக்கும் இவனுடன் உறவு வேண்டியிருந்தது. இவனுக்கும் அவர்களுடன் இணைப்பு வேண்டியிருந்தது. நல்லதோ, பொல்லாதோ, எதற்கும் இவன் தொடர்பு இருந்தது. இவனால் இதமும், உபகாரமும் இல்லாமற் போகவில்லை. ஆனால் புதிதாக அவனிடம் காணப்பட்ட முரண்பாடுதான் புலப்பட்டது வெளிக்கு.

பிறந்தகத்திலும் புக்ககத்திலும் சரி நிகர்ப்பிரியம் கொண்டு, இரண்டு புறமும் சாயும் பெண்ணைப்போல், குழந்தைத் தனமும் பெருதனமும் ஒண்டும் கிழப்பிராயத்தானைப்போல், மணியும் அல்லற்பட்டான்; பிறருக்கும் அல்லற் கொடுத்து வந்தான்.

இந்த நிலையில், இன்னொரு மாறுதல் நிகழ்ந்தது. இயற்கையாகப் படிப்பிலே மணி தூடிக்கை. மேதாவியுமல்ல, மந்தியுமல்ல அவன். ஆதலால், சிறந்த வெற்றியோ, படுதோல்வியோ, படிப்பு விஷயத்திலே அறிந்திராதவன். ஆனால் ஏனோ இந்த விசை பரீக்ஷையில் கொஞ்சம் மட்டம் தட்டிவிட்டான். மூன்று அல்லது நான்கு 'ராங்கா'கவே (வரிசை) வந்து கொண்டிருந்தவன் தடதடவென்று பதினோறாவதாக இறங்கிவிட்டான். பாவம், அவனுக்கே என்னமோ போலத்தான் இருந்தது.

வீட்டிற்கு வந்து ரொம்ப நேரம்வரை அதை வெளியிட நா எழும்பவில்லை அவனுக்கு. கடைசியில், முணுமுணுப்போ, கடுகடுப்போ, சொல்ல வகையற்ற ஒரு பொருமலோடு சொன்னான் சேதி.

"உம், பின்னே இப்படித்தானே 'ராங்க்' குறையணும்', உனக்குப் புத்தி வரணும்! இடத்தை விட்டு நகருகிற பாடு இல்லாமல் 'செஸ்ஸு'ம்', 'கேரம்ஸு'ம் விளையாடிக்கொண்டிரு தினமும்! உடம்பு கூனிக் குறுகிப் போகட்டும், மூளையும் மங்கிக் கெட்டுப் போகட்டும்! படிப்பும் அதேபோல மழுங்கலாம் தாராளமாய்!" என்று ஒரு இரைச்சல் போட்டார் அவனுடைய அப்பா.

"எது சாக்கு என்று காத்துக் கொண்டிருக்கிறார் அப்பா, 'செஸ்ஸை'யும், 'கேரம்ஸை'யும் தாக்க!" என்று முணு முணுத்தான் மணி. அதைக் கவனிக்காமல், கவனித்ததாகக் காட்டிக் கொள்ளாமல், அப்பா சமையலறைக்குப் போனார். "பார், லக்ஷ்மி! அன்றைக்குத்தான் சொன்னேன் நான், 'கிரிக்கெட்', 'டென்னிஸ்'னு சில பேர் எப்படி வெறியாயிருக்கிறார்கள், என்று! 'அவற்றைப்பற்றி பேசித் தர்க்கம் பண்ணுகிறதிலே பொழுது செலவழிக்கிறார்கள்; படிப்பைக் கெடுத்துக் கொள்கிறார்கள் பிள்ளைகள்,' என்று பேப்பரிலே கண்டிச்சு யாரோ எழுதியிருக்கிறதாகச் சொன்னேன்! நம்ம பிள்ளையானால், அதைவிட மோசமாய், கிரிகெட், டென்னிஸ் நினைப்பு இல்லாமலேயே படிப்பைக் கெடுத்துக் கொள்கிறது! எப்படியிருக்கு, வேடிக்கை!" என்று மணியின் தாயாரைப் பார்த்து, மணியைக் கிண்டல் பண்ணினார்.

மணிக்குப் பொறுக்கவில்லை அந்த எகத்தாளம்.

"தினமும் சாயங்காலம் வந்தால் இந்தப் பேச்சுத்தான்! சீ!" என்று அலுத்துக் கொண்டான்.

அதுவும் வாஸ்தவம்தான் என்று சொல்ல வேண்டும்.

கொஞ்ச நாட்களாக அப்பா அவனை இந்த 'ஆட்ட' விஷயமாக சாட்டிச் சாட்டியே பேசிவந்தார். பள்ளியிலிருந்து மீண்டதும், ரேடியோவை முடுக்கிவிட்டு, அதனருகே அமர்ந்து, அம்மா கொணர்ந்து தரும் 'கோக்கோ' வின் ருசியை அனுபவித்துக் கொண்டே, பக்ஷணத்தை, அசை போட்டுக்கொண்டே சிறிது நேரம் போக்கிவிட்டு, அப்புறம் பக்கத் தகத்துப் பையன் வந்ததும், 'செஸ்' பலகையோ, 'கேரம்' பலகையோ கொணருவான் மணி. ரேடியோவில் நிகழ்ச்சிகள் நிகழ்ந்துகொண்டேயிருக்கும். எதிரே தரையில், இவர்கள் ஆட்டமும் நடந்துகொண்டேடியிருக்கும். இருட்டின பின்புதான் முடியும் ஆட்டம்.

இது தந்தை சுந்தரமையருக்குப் பிடிக்கவில்லை.

"நல்ல தேகாப்பியாசம் வேண்டாமா? இந்த வயதில் ஓடி ஆடி, பந்தும் பாட்டும் பிடித்து விளையாடுவார்களா, இப்படி ஆணி அறைந்தாற்போல இடம் விட்டு நகராமல், சாயங்கால வேளை அடைந்து கிடப்பார்களா? உடம்பு ரொம்ப அழகாயிருக்கும் வயசு வந்தால்!" என்று அவர் அடிக்கடி இரைந்து வந்தார்.

பெஞ்சியிலே இரண்டு தலையணைகளை உயரமாக வைத்து, சாய்ந்து படுத்தவாறு புத்தகம் வாசித்துக் கொண்டிருப்பான் மணி. "உம், உடம்பை எப்படிப் பாழாக்கலாமோ, அவ்வளவும் செய்' என்று சொல்லிக்கொண்டே அவ்வழியே போவார் தந்தை. அவர் தலை மறைந்தபின்பு, அவர் வார்த்தைக்காக, 'மெனக்கெட்டு' நிமிர்ந்து உட்காருவான். ஆனால் அவர் அடுத்து அவ்வழியே வரும்பொழுது, அநேகமாய், மீண்டும் குற்றச்சாட்டுக்கு இலக்காக வளைந்து படுத்திருப்பான் பிள்ளையாண்டான்!

தந்தை பேசி வருவதைச் சாதுவாகச் சகித்துக்கொண்டு இதுநாள் வரை இருந்து வந்தான் மணி. ஆனால் இன்று நிகழ்ந்த ஒரு மாறுதல், மற்றொரு மாறுதலுக்கு அடிகோலியது. தேகப்பயிற்சியையும், உடல் நன்மையையும் உத்தேசித்துக் குறிப்பிட்டு இத்தனைநாள் தாக்கி வந்த அப்பா, அன்று படிப்பையும் சேர்த்து வைத்துத் தாக்கி இரையவே, அந்தத் தாக்குதல் நியாயமானது போலும் அவனுக்குத் தோன்றவே, ரோசமாக இருந்தது; அவமானமாக இருந்தது மணிக்கு.

"அப்பப்பா! பெரிய தொல்லை!" என்று முணு முணுத்துக் கொண்டே ரேடியோவை முடுக்கினான். ஏதோ கோளாறுபோலும் மின்சார அமைப்பிலே! மௌனம் சாதித்தது ரேடியோ! சிறிது நேரம் அவனுக்கும் ரேடியோவுக்கும் போராட்டம்; இறுதியில் ரேடியோ வெற்றி பெற்றது. மோனம் சாதித்தது! வெகுண்டது மணியின் மனசு.

"வேணுமென்றே கூட இப்படி கனெக்ஷனைக் கெடுத்து வச்சிருப்பா, இந்த அப்பா!"

"அம்மா 'கோக்கோ', பக்கவடாம் சகிதம் வருவதை அறிந்தே, அவள் காதில் படும்படியாக ஒரு போடு மெல்ல போட்டுவிட்டு அங்கிருந்து திரும்பினான் மணி.

"இந்தா . . . தின்னுட்டுப் போ, மச்சுக்கு!" அம்மாவுக்காக 'கோக்கோ'வை மட்டும் அவளெதிரே மடமடவென்று குடித்துவிட்டு "பக்கவடாம் வேண்டியதில்லை," என்று சாதித்து விட்டு மச்சுப்படி ஏறிவிட்டான் மணி.

ஒரு அலாதி திருப்தி அவன் மனதில் அப்பொழுது! கொஞ்சநாளைக்குமுன்பு தன்மேல் அப்பா இதேபோல அபாண்டமாக ஒன்று கற்பித்தார்! தானும் பதிலுக்கு ஒரு 'அபாண்டம்' கற்பித்து சுமத்தியாகிவிட்டது!

ஆம், அவனுடைய அப்பா அவன் மேலே 'அபாண்டமாக'த் தான் சொன்னார் அன்று; மணியின் இளம் உள்ளம் அதை மறக்குமா?

இந்த வயதின் கோளாறுதான் - மணி தன் அதிகாரத்தை குழந்தைகள் மீது வெகுவாக உபயோகித்து வந்தான். பெரிய தம்பி 'நரசு'வை அவன் ஆட்டியேதான் வைத்தான். அந்தப் பயலும் ஒரு விஷமக் களஞ்சயம் - ஏதாவது லூட்டி அடித்த வண்ணம் இருக்கும், அண்ணனின் தாக்குதலுக்கு ஆளாகிக்கொண்டேயிருக்கும். 'நரசு'வை 'நச்சு' என்று அண்ணன் மணி கேலியும் கோபமுமாக அழைப்பதும் வழக்கமாகிவிட்டது. அவனும் சளையாமல் 'நான் நச்சு'ன்னு தெரிஞ்சிண்டே என்னை வையறே பாரு! உன்னை 'மணி'ன்னு கூப்பிடக் கூடாது, 'மண்ணு'னுதான் கூப்பிடனும்?" என்று பதில் கொடுப்பான். ஆத்திரம் தாங்காமல் போட்டு அடிப்பான் நரசுவை - அவனும் வாங்கிக்கொள்வான். அன்பிற்குக் குழந்தைகள் கட்டுப்படுமேயன்றி, கொடுமைக்கா வணங்கும்! ஆனால் 'இரண்டுங் கெட்டான்' மணிக்கு அவ்வளவு தெரிந்துவிட்டால், வேறு என்ன குறைச்சல்?

இந்த நிலையில் பெரம்பூரிலிருந்து சென்னைக் கடற்கரைக்குச் சைக்கிளிலேயே போய் வரணும் என்று மணியும் நண்பனும் ஒரு திட்டம் போட்டார்கள். தாங்களே தனித்தனியாக - பாரமில்லாமல் - போய் வருவதைவிட, ஒவ்வொருவரும் ஒரு குழந்தையையும் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு போய்வருவது திறமை, பெருமை என்று தோன்றியது நண்பனுக்கு. அவனுக்கு ஒரே தம்பி, அருமைத் தம்பி; அவனுக்கு அந்த யோசனை தோன்றவே, மணி ஆமோதிக்க வேண்டியதாயிற்று. வீட்டிலே அம்மாவுக்குச் சொன்னான், நரசுவைத் தான் அழைத்துப் போகிறதாக. தங்கை பதினோரு வயதுப் பெண், கடைசி தம்பி ஐந்து வயதுக் குழந்தை; ஆதலால் நரசுவைத்தான் எடுத்துப் போகணும், என்று தோன்றியதால், மென்று விழுங்கிக் கொண்டே, வெட்கப்பட்டுக்கொண்டே சொன்னான். அம்மா அப்பாவிடம் சொன்னாள் - அனுமதி கேட்கும் பாவனையிலே.

அவர் என்ன கோபமாக இருந்தாரோ - இல்லாவிட்டால் அப்படி எரிந்து விழமாட்டார். "எங்கேயாவது தம்பியைக் கழுத்தைப் பிடித்துக் கடலில் தள்ளிவிட்டு வந்துவிடப்போகிறான்!" என்றார்! அவரும் லக்ஷ்மியம்மாளும், நரசுவை மணி வாட்டி வதைப்பது ராக்ஷஸத்தனம் என்று மணியைக் பல தடவைக் கடித்துக்கொண்டதுண்டு. ஆனால் அன்று அவர் அப்படிச் சொல்லவே, லக்ஷ்மியம்மாள், "ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் பாவம்!" என்று கேட்டுவிட்டு, மகனின் மனம் என்ன புண்பட்டதோ என்று கவலையுடன் திரும்பிப் பார்த்தாள். அதற்குள் சுண்டிப்போன முகத்தில் கண்ணீர் வராமல் தவித்துக் கொண்டு மளமளவென்று உள்ளே போய்விட்டான் மணி. இறுதியில், மணியும் நண்பனும் மட்டும் போய் வந்தார்கள் சைக்கிளில். அன்று தந்தை அப்படி அநியாயமாகச் சொன்னதற்கு பதில், இதோ, இன்று அவனும் அப்பா மேல் 'அநியாய'க் குற்றம் சாட்டியாச்சு! அமைதியாக மொட்டை மாடிமேல் உலாத்தினான் மணி.

"உனக்குப் பிடிக்குமே மணி வெங்காயப் பக்கவடாம்! தின்னுடாப்பா!" என்று அம்மாவே மூச்சு வாங்க பக்கவடாத் தட்டுடன் வந்துவிட்டாள்.

"சரி, வை!" என்று சொல்லிவிட்டு, அம்மா இறங்கிப் போனதும் முக்காலிமேல் உட்கார்ந்து திங்கலானான். அம்மா வலியவந்து டிபன் கொடுத்துவிட்டுப் போன திருப்தியும் சேர்ந்துகொண்டது.

'சரி, ரேடியோ கேட்காவிட்டால், செஸ் இரண்டு ஆட்டம் ஆடினால் போச்சு!' என்று எண்ணியவாறு ஏதேதோ இன்னும் எண்ணிக்கொண்டிருந்தான்.

"அவன் இனிமேல் சாயங்காலம் 'பாட்மிண்டன்' ஏதாவது விளையாடுவானப்பா! அவன் உடம்பு கூனிக் குறுகிண்டு போகிறது, படிப்பும் பாழாகிப் போறது! இனிமேல் சாயந்திரம் விட்டிலே அடைஞ்சு கிடந்து சதுரங்கமும், கேரம்ஸும் விளையாடாதீர்கள். உனக்கும்தான் நல்லது சொல்றேன்..."

தந்தையின் இந்தப் பேச்சு கீழேயிருந்து கேட்டது... தூக்கிப் போட்டது மணிக்கு!

'என்ன அக்கிரமம்! பாபுவை அப்பா கோபிக்கிறாரா?... ஐயோ.... நண்பன்.... பாவம்!' . . . .

கீழே ஓடி வந்தான் மணி. சுற்றுமுற்றும் பார்த்தான். பாபுவைக் காணோம்! அப்பா அப்பாவி போல தோற்றமளித்தார்.

கோபம் கோபமாக வந்தது மணிக்கு.

ஆகா! ஏமாற்றத்தின் மேல் ஏமாற்றமா தனக்கு! அக்கிரமம்! வீடு வந்த நண்பனை விரட்டியடிப்பது அழகா?... அக்கிரமம்! அப்பா இப்படித் தன்னை முந்திக் கொள்வதா? அக்கிரமம்! சொந்த அப்பா தனக்கு மனம் நோக வைத்த வண்ணம் நடடப்பதா? அக்கிரமம்! அக்கிரமமும் அநியாயமும் தாண்டமாடும் இந்த விட்டிலேதான் இருப்பதா? வாழ்வதா? முடியாது! வெட்கக்கேடு! கூடாது!

வேகமாக திரும்பினான் மாடிக்கு.

மொட்டைமாடியின்மேலிருந்து காணப்பட்ட வானவெளி - சூன்யமான வானவெளி - வாழ்வே அத்தகையதுதான் என்று உபதேசம் செய்ததோ? அங்கிருந்து சுற்றுப்புறம் தென்பட்ட காட்சி, உலகம் விசாலமானது, அவனுக்கு அதிலே வேறு இடமில்லாமற் போகவில்லை என்று சொன்னதோ? . . . அவன் மனம் ஒரு முடிவு செய்திருந்தது, மறு கணம்.

கீழே வந்தான், அறைக்குள் சென்றான். ஒரு பையில் இரண்டு ஜோடி சிறாய்கள், இரண்டு ஜோடி ஷர்ட்டுகள் எடுத்துத் திணித்தான் அறையை விட்டு வெளி வந்தான்.

அம்மா கண்ணில் தென்பட்டாள். கலங்காமல், சலனமற்று வாசற்புறம் திரும்பினான் மணி.

பெற்ற தாயின் மனதுக்கு என்ன தோன்றியதோ. "எங்கே போகிறாய் மணி? பையில் என்ன?" என்று வினவினாள்.

"பாபு வீட்டுக்குச் 'செஸ்' எடுத்துண்டு போகிறேன், அங்கே விளையாடப்போகிறேன்!" என்று மிடுக்காகச் சொல்லிவிட்டு வெளியேறிவிட்டான்.

தெருவோடு போகும்போதே ஒரு யோசனை பிறந்தது.

பஸ் ஸ்டாண்டைத் தவிர்ப்பது நலம் என்று தோன்றியது, அப்படியானால், உடனே ஊரைவிட்டு வெளியேற வழி? ரயில்தான்! ஆனால் சென்னைக்குப் போகும் ரயில் அப்போது, உடனே, கிடையாது. திருவள்ளூர்ப்பக்கம் தான் போகலாம். உடனே ரயில் ஏறினால்! சரி, அப்படி அந்த ரயிலைப் பிடித்து, உடனே ஓடிவிடுவது தான் நலம் என்றும் உடனே தோன்றிற்று. 'சென்னைக்குப் போகலாம், அங்கே அநேகம் பேர் தெரிந்தவர்கள்; ஒவ்வொருவர் வீட்டிலும் ஓரோரு நாள் தங்கினாலும் பத்து நாட்கள் தாட்டிவிடலாம்! அப்புறம் வழியா கிடைக்காது தப்ப?' என்று ஒரு எண்ணத்துடன் வீட்டிலிருந்து புறப்பட்டான் மணி. ஆனால் சென்னைக்கு வண்டி கிடையாது என்று தோன்றினதும் சென்னை போகாமலிருப்பதே நன்மை என்று முடிவு செய்துவிட்டது அவன் மனம்.

வில்லிவாக்கத்திலே நடக்கும் காளியம்மன் திருவிழாவுக்கு அன்று காலை ஒரு நண்பனும் அவன் வீட்டாரும் போனதாக பள்ளியில் பிற்பகல் மணி கேள்விப்பட்டான். திருவள்ளூர் வண்டியில் ஏறிக்கொண்டு வழியில் வில்லிவாக்கத்திலே இறங்கி விடுவதென்று நிச்சயம் செய்துவிட்டான். அங்கே அப்பாவின் நண்பர் ஒருவர் உண்டு இரண்டொரு தடவை அப்பாவோடு போயிருக்கிறான் அவன் - ஆதலால் அங்கே தங்கியிருக்கலாம் இரண்டு மூன்று நாள். அப்பா பிள்ளையைத் தேடப் புறப்பட்டால் முதலில் பட்டணம் நினைவுக்கு வரும் - அங்கேதான் போய்த் தேடிக்கொண்டிருப்பார்! வில்லிவாக்கம் உடனே நினைப்பு வராது. அப்பா பட்டணத்தில் திண்டாடி கொண்டிருப்பார்; அவன் இங்கே திருவிழாப் பார்க்கலாம்! பேஷ்! அவன் நினைத்தது பலித்தது.

** ** **

'செஸ்' ஆடப்போனவன் வரக்காணோமே என்று பாபுவை விசாரித்ததில், மணி அங்கே போகவில்லை என்று தகவல் தெரிந்தது. சுந்தரமய்யருக்கு. பல்லைக் கடித்துக்கொண்டு விடியும் வரை பார்த்தார்கள். பிள்ளையைக் காணாமல் பெற்ற தாய் அலட்டிக்கொண்டேயிருந்தாள். நிலைமை அப்போதுதான் அவரையும் குலுக்கியது, சுந்தரமய்யர் பட்டணம் விரைந்தார்; ஓரோர் நண்பர் வீடுகளிலும் விசாரித்துக் கொண்டு வந்தார் குட்டாக.

இங்கே வில்லிவாக்கம் ராமையர் வீட்டார் மணி சொன்னதை நம்பத்தான் நம்பினார்கள் - திருவிழாவுக்கு மணி வந்தது சந்தோஷம்தான் என்று. ஆனால் அவனுடைய பெற்றோரும் வந்திருந்தால் வேடிக்கையாக இருந்திருக்கும் என்றும் சொன்னார்கள்.

மறுநாள் காலை சுந்தரமய்யர் ஒருவித பரபரப்பிலே இருந்தார். ராமையர் வீட்டிலே வேறு தினுசான கலகலப்பிலே திளைத்துக் கொண்டு இருந்தார்கள். திருவிழாவிலே பக்தர்கள் 'பூக்குழி' இறங்கும் விந்தைக் காட்சியைப் பார்க்க ராமய்யர் வீட்டு மேன்மாடி நன்கு உதவும். அன்று இரவு நடக்கவிருந்த அந்த வைபவத்துக்கு, வருவோர் போவோருக்கு இடவசதியிருக்கும்படி செய்ய, அவர்கள் ரொம்பவும் உத்ஸாகமும் அக்கரையும் கொண்டு, நாற்புறமும் சுற்றிச் சுற்றி வந்தனர். மணியின் மனதும் அந்த கலகலப்பிலேயும், ராமையர் மகன் கோபியின் தோழமையிலும் இன்பம் நுகர்ந்து கொண்டிருந்தது, வீட்டிலே தன்னைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள் என்பதிலே திருப்தியும் கண்டது. அன்று பொழுது பறந்ததுபோல இருந்தது அவனுக்கு.

பள்ளிக்கூடம் தனக்கு இரண்டு நாள் விடுமுறையாதலால்தான் அந்த இரண்டு தினங்களையும் அங்கேயே கழிக்க வந்திருப்பதாக கோபியிடம் சொன்னான், மணி. அவனும் உற்சாகத்துடன் பெற்றோரிடம் தெரிவித்தான். அவர்கள் அதைப்பற்றி யோசனை ஏதும் செய்யாததில் ஆச்சரியமில்லை. "பேஷாக இருக்கட்டும்!" என்றார்கள்.

மறுநாள் காலை ஒன்பது மணியிருக்கும். கோபியின் தங்கை, ஆறுவயதுப்பெண் ஒரு சிறு புயலை மணியின் உள்ளக் கிடையிலே கிளப்பிவிட்டாள்.

"இதோ பாரு, என் போட்டோ! மெட்றாசுலே எடுத்தது" என்று சொல்லிக்கொண்டே ஒரு படத்தைக் கொணர்ந்து நீட்டினாள் மணியிடம். "எங்கே, நீங்கள் எல்லாம் நிறைய போட்டோ எடுத்துக்கொண்டு இருக்கிறீர்களா? கொண்டு வா, பார்ப்போம்!" என்று கோபியிடமும், அவன் தங்கையினிடமும் சொன்னான் மணி. போட்டோக்கள் என்றால் அவனுக்கு ஒரு ஆசை, பொழுது போகணுமே! கேட்டான்.

கோபி ஐந்தாறு படங்களைப் பொறுக்கித் திரட்டிக் கொணர்ந்து தந்துவிட்டு, குளிக்கப் போய்விட்டான். அவனுக்கே வெட்கமாக இருந்ததோ என்னமோ, ஐந்தாறு படங்களைக் கொணர! வேறு இருந்தால்தானே எடுத்துவரலாம்!

மணிக்குச் 'சட்'டென தன் வீட்டு நினைப்பும், வீட்டிலே குவிந்து கிடக்கும் போட்டோக்கள் நினைப்பும் வந்தது.

'ஆகா! எத்தனை போட்டோக்கள்! ஒவ்வொருவரையும் எடுத்திருக்கிறார், அப்பா! கண்ணாடி போட்டு மாட்ட இடமில்லாமல் அடுக்கி அலமாரிக்குள் வைத்திருக்கிறார்!'

இவன் மூத்த பிள்ளை, அருமை பெருமையாக இவனுக்கு, இவனைப் பற்றி ஒரு போட்டோ ஆல்பம் வேறு!

"நம்ம குழந்தைகள் வயது வந்த பின்பு தங்கள் குழந்தைப் பிராயத்தை நினைத்துப் பார்த்துச் சந்தோஷப்பட வேண்டாமா? குழந்தைகளைப் போட்டோ எடுக்கக் கூசவே கூடாது!" என்று சொல்வார் அடிக்கடி அவன் அப்பா.

'ஆல்பம்', 'அப்பா', என்ற நினைப்பைத் தொடர்ந்து இன்னொரு விஷயம் நினைவு வந்தது; ஓரோர் குழந்தையைப் பற்றியும் ஓரோர் 'டயரி' வைத்திருக்கிறார் அப்பா! அவர்கள் பிறந்தது முதல் அன்றாடம் நிகழ்ச்சிகளை, மனோபாவங்களை குறித்து வைத்திருக்கிறார்! ஆகா, என்ன சிரத்தை அப்பாவுக்கு! 'குப்புறித்தான்', 'சிரித்தான்', 'சுரம் வந்தது', 'சளி பிடித்தது', என்று எழுத முடியாத தேதிகளுக்குக் கீழே, "அழகு பொலிக" "அறிவு வளர்க!" என்றெல்லாம் குறிப்பிட்டு, எத்தகைய அன்பும், அக்கரையும் ஆதரவும் காட்டியிருக்கிறார்!

கற்பனையை விரிப்பதிலே அலுப்பு சலிப்பு உணராத கலைஞனைப்போல, அவனுடைய கலையுள்ளத்தைப் போல - மணியின் உள்ளம் ஒரு அலாதி நிலைமையை எய்தியது.

அவனைப் பற்றிய டயரியில் ஒரு குறிப்பை நாடிச் சென்றது.

"இன்று தாயும் சேயும் சோழி விளையாடினார்கள்! லக்ஷ்மி ஜயித்தாள் 101 பாயிண்டுடன். மணிக்கு 32 பாயிண்ட்கள். "மணி! 101 பெரிதா, 32 பெரிதா?" என்று கேட்டேன் வேடிக்கையாக. அவன் முகம் சுண்டவில்லை. சாக்பீஸை எடுத்துக்கொண்டு, தரையில் பெரிய எழுத்துக்களில் 32 -ம் சின்ன எழுத்துக்களில் 101-ம் எழுதினான்! 'எது பெரிசு?' என்று கேட்டான்! விந்தை!"

"தோல்வியை இப்படியன்றோ இன்முகத்துடன் ஏற்க வேண்டும்? வாழ்க்கையிலே இன்ப துன்பங்களையும் மணி இதே நோக்கங் கொண்டு ஏற்பானாக!" இப்படி எழுதியிருந்தார் ஒரு குறிப்பு.

இந்தச் சம்பவம் மணியின் எட்டாவது பிராயத்திலே நடந்தது. அவன் அதை மறந்தேயிருந்தான். சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு டயரியைப் புரட்டிக் கொண்டிருந்தபோது, அதைக் கவனித்து, "இப்படியா சொன்னேன்!" என்று அவனே வியந்து கொண்டான்! மீண்டும் மறந்தான் இது நாள்வரை. ஆனால், அவனுக்கு அது நினைவு வந்துவிட்டது!

தான் ஓடிவந்துவிட்டதையும், தன்னைப்பற்றி தந்தை அந்நாளில் நினைத்ததையும் எண்ணியபோது, அவனுக்கு நெஞ்சில் ஏதோ என்னமோ செய்தது!

"தீக்குழி, பூக்குழியாக பக்தர்களுக்குத் தோன்றுவதற்குக் காரணம், மனசுதானே! ஒரு உறுதியும் பற்றும் மனதில் இருந்தால் 'தீ' பூப்போல தோன்றும் - உலகில் கஷ்டங்களைச் சுகங்களாகப் பாவித்தால், வாழ்வே சுகம்தான்! இதுதான் இந்தப் "பூக்குழி" வைபவத்திலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டிய உண்மை!"

இப்படியாக முதல்நாள் காலை ராமையர் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொண்டிருந்ததை, மணியும் கேட்டுக்கொண்டுதான் இருந்தான். ஆனால் அப்போது சிறிதும் அதைப்பற்றி சிந்திக்காதவன், இன்றோ சிந்தனையின் சிறிய இழுப்பிலே அமிழ்ந்தான். வேதனையின் வலிய இழுப்பிலே, இந்த நினைப்பும் ஓடிவந்தது!

முத்துக்கோவைபோல அவன் எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் அணிவகுத்து நின்றன. இறுதியிலே ஒரு நினைப்பு உணர்ச்சி - அது முத்துச் சரத்திற்கு பதக்கமாய் அமைந்து, அவன் நெஞ்சை அணைத்துக்கொண்டது. அதன் அணைப்பிலே, ஆண்மை மிகுந்திருந்த அவன் நெஞ்சத்தினிலே ஓர் குழைவு, நெகிழ்ச்சி!

ஐயோ, தந்தை தன்னைப் பற்றி கண்ட கனவு என்ன! தான் போகும் போக்குதான் என்ன!

தன்னால் தாளமுடியாதபடி என்ன நடந்துவிட்டது வீட்டிலே! . . . ஒன்றுமில்லையே! ஆமாம்! ஒரு விபரீதமும் அப்போது நடக்கவில்லை; தான் பிரமாதமாக நினைத்துவிட்டதுதான் இப்போது விபரீதமாக நடக்கிறது!

அங்கே பெற்றோர் என்ன துடிக்கிறார்களோ? தன்னைக் கோபிக்க அவர்களுக்கு உரிமையில்லையா? தன் தம்பியைத்தான் எப்படியெல்லாம் ஆட்டி, அதிகாரம் செலுத்துகிறான்? தன்னை, தன் நலத்திற்காக பெற்றோர் கடிந்துகொள்வது, பிசகா? அவர்கள் தன்னைக் கோபிக்கக் கூடாதா?

"கோபிக்கக்கூடாது!" என்று தான் நினைப்பது அன்றோ, அநியாயம், அக்கிரமம்!

அன்பு நிறைந்த அவர்கள் உள்ளத்தைத் தான் சிதற அடிப்பது அன்றோ அக்கிரமம்!

ஒன்றுமில்லாததற்கு வெகுண்டு தான் ஓடிவந்துவிட்டது அன்று அநீதி!

மணியின் மனம் குன்றிவிட்டது. வீட்டுக்குத் திரும்பிச் செல்வதே சரியான செய்கை என்பதை உணர்ந்தான்; ஆனால் போதிய மனோபலம் இல்லை!

ஒருவாறு சாப்பாடு முடிந்தது. கோபி வேடிக்கையும் விளையாட்டுமாக இருந்ததால், சற்று அவன் மனம் தெளிந்தது. அதனால், 'இப்படியே எப்படியாவது கடத்தலாம் கொஞ்சநாள்! அப்புறம் வீட்டுக்குப் போனால் போச்சு!' என்றுகூட தோன்றியது.

புயல் காற்றுக்கு எதிர் நின்று கீற்றுக் கொட்டகை வீறாப்புக் பேசமுடியுமோ? கடைசியில் சிதறுண்டது மணியின் எண்ணம்.

மாலை 4.30, 5 மணியிருக்கும். கோபியின் தாய் ராமையர் மனைவி குறுக்கும் நெடுக்குமாக வாசலுக்கும் உள்ளுக்கும் நடந்துகொண்டிருந்தாள். இரண்டு தடவை கோபியைக் கூப்பிட்டாள். மணியுடன் பேச்சு மும்மரத்தில், அந்த 'இரண்டுங் கெட்டானும்' அழைப்பிற்குச் செவி சாய்க்கவில்லை.

கடைசியில் அந்த அம்மாளே பிரசன்னமாகி, "ஏண்டா கோபி, கூப்பிட்டுக் கூப்பிட்டுத் தொண்டை கட்டிப்போச்சே! நாழியாச்சு போலிருக்கே! கொஞ்சம் போய், அவளைக் கூட்டிவாயேன்!" என்றாள்.

"ஆமாம்! போய்க் கூட்டிண்டு வரணுமாக்கும் ராணியை! போம்மா, என்னாலே முடியாது! அவளே வருவாள், வழி தெரியாதோ?" என்றான் கோபி. மணியின் முன் மதிப்பாக இருக்க ரொம்ப மும்முரமாக கையிலிருந்த புத்தகத்தைப் புரட்டிக்கொண்டு பேசினான்.

"வழி தெரியாது என்பதற்காக வரச் சொன்னேன்? 'என்னமோ தாமதம் ஆகிறாப்பலே இருக்கே,' என்று கவலையாயிருக்குப்பா! வருகிற வழியிலே குளம் இருக்கே, ஜாக்கிரதையாய் குழந்தை வீடு வந்து சேரணுமே என்று தினமும் தான் கவலை எனக்கு! நேற்று திருவிழா வேறே, ஊரிலே ஜனநடமாட்டம் ஜாஸ்தி! கைவளையை கழட்டிண்டு கூட அனுப்பல்லை நான்! இப்பத்தான் எல்லாம் நினைப்பு வந்தது. பயமாயிருந்தது. உன்னண்டை சொல்கிறேன்! போய் வரயாடா? மணியையும் பள்ளிக்கூடப் பக்கம் அழைச்சிண்டு போய் வந்தமாதிரியிருக்கும்? புறப்படறாயா?" என்று சொல்லிவிட்டு, போகக் கிளம்பினாள் அவன் தாய்!

"என்னால் இப்போது நகர முடியாது! சாயங்காலமாக மணியைப் பள்ளிக்கூடப்பக்கம் அழைச்சிண்டு போய்க் கொள்கிறேன்!" என்றான் கோபி.

பிள்ளையின் குணமும், மனசும் அம்மாவுக்குத் தெரியாதா?

"என்னவோப்பா, நான் இதற்குமேல் என்னத்தைச் சொல்லுவேன்!" என்று சொல்லிக்கொண்டே மறைந்துவிட்டாள் அந்த அம்மாள்.

மணிக்கு கோபி செய்வது அநியாயம் போலப்பட்டது. "கோபி, போய்த்தான் வரலாமே!" என்றான்.

"நாழி ஒன்றும் ஆகவில்லை, மணி! வெறுமனே பயம், இந்த அம்மாவுக்கு! தங்கம் இந்த வருஷம் பள்ளிக்கூடம் போக ஆரம்பித்ததிலேருந்து, முக்கால்வாசி நாளும் சாயங்காலம் அம்மாவுக்கு இந்தப்பயம்தான்! நாழியாகிறதுக்கு முன்னேயே அலட்டுவாள்!' ஒரு பத்து நிமிஷம் பார்க்கலாம், தங்கம் வராவிட்டால் போகலாம் நாம்!" என்று சொல்லிவிட்டான் கோபி.

கொஞ்சநேரமாயிற்று. மணி துரிதப்படுத்தினதன்மேல், கோபி புறப்பட்டுவிட்டான். கொஞ்சதூரம் போனார்கள் இருவரும், பாம்பாட்டியின் வித்தையைப் பார்த்துக் கொண்டிருந்த சிறு கும்பலருகில் தங்கம் தென்பட்டாள்.

"வாடி தடிச்சி, வீட்டுக்கு!" என்று அதட்டி, தங்கையை அழைத்து வந்து அம்மாவிடம் ஒப்புவித்தான் கோபி.

மணியின் மனது ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. இந்தச் சம்பவத்திற்குப்பின் 'வீட்டுக்குப்போய் விட வேண்டியதுதான் சரியான செய்கை!' என்ற உறுதி பிறந்ததும், ஆவலும் பெருகியது. ஆனால் கொஞ்சம் அடக்கினான் மனதை.

கடைசி ரயிலில் போய் இறங்கினால், வீட்டிலே எல்லோரும் படுக்கப் போயிருப்பார்கள். கதவைத் தட்டினால், திறப்பார்கள்; அனாவசியப் பேச்சு கீச்சு இல்லாமல், தான் நேராக படுக்கைக்குப் போய்விடலாம்! விடிந்தால், எல்லாம் 'ஒழுங்காக' தினம்போல நடக்கும்! தர்மசங்கடமாக ஏதுமிராது, தான் சமாளிக்க!

மணியின் உள்ளக்கிடையில் நிகழ்ந்த போராட்டங்களை ராமையர் வீட்டார் அறிந்தவர்களன்றோ? அவன் விடைபெற்றுச் சென்றபோது, 'திருவிழா பார்க்க வந்து இரண்டு நாள் தங்கிவிடப் போகிறான் மணி!' என்று தான் எண்ணினார்கள். அவனுடைய பெற்றோர் வராததால், தங்களுக்குக் கோபம் என்றுகூட ஊர்போய் சொல்லும்படி மணியிடம் கூறி அனுப்பினார்கள்.

** ** **

தெருமுனை நுழைந்தாச்சு - மணியின் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. ஓரிரண்டு வீடுகளில் விளக்குகள் 'மினுக்' 'மினுக்'கென்று மினுக்கின. பெரும்பாலானோர் வீடுகளில் எல்லோரும் படுக்கப்போயாச்சு.

எதிர் சாரியில் நடந்து வந்துகொண்டிருந்த மணி, தன் வீட்டைக் கூர்ந்து நோக்கினான். தன் வீடுதானா அது? விளக்கொளியா தன் வீட்டிலே? புதுமையாக இருக்கிறதே?...... படுக்கப் போகும்போது விளக்கெல்லாம் அணைத்துவிடுவது வழக்கமாச்சே வீட்டிலே! இன்னும் அவர்கள் விழித்துக்கொண்டுதான் இருக்கிறார்களா?.... ஒருவேளை - அம்மா - தன்னைக் காணாமல், அல்லும் பகலும் புலம்பிக்கொண்டிருக்கிறார்களோ? . . . .அதனால் தானோ - இந்த . . . .

கொஞ்சம் நின்றான் மணி.

வீட்டிற்குள். ஓடிவிடவும் ஆவேசம்; ஆனால் கால் எழும்பவில்லை அவனுக்கு: 'எப்படி அவர்கள் எதிரே போய் நிற்பது?'இறுதியில் அன்பும் பாசமும் வெற்றி கொண்டன. 'கோபியின் அம்மா துடித்தாளே? அது போல, அதைவிட அதிகமாகத்தான் அம்மா பதறிக்கொண்டிருப்பாள்; போய் அம்மாவின் கவலையைப் போக்கிவிடணும்!'

உருளை மீது ஓடும் மரப்பொம்மை போல மணி வீட்டை நோக்கி விரைந்தான்.

"அம்மா - ஐயோ - அம்மாடி!... உம் - மணி வரவில்லையே இன்னும்" . . . ?

உண்மை! அம்மாவின் புலம்பல்தான் அது! வாசலிலே நின்றுவிட்டான் மணி.

"இப்படி அண்ணனைத் துரத்திவிட்டுப் பிறந்திருக்கே இது! ஐயோ, இதன் முகத்தைப் பார்க்கவே பிடிக்கல்லையே எனக்கு . . . ஈசுவரா. . . "

'ஆ! என்ன!'

'பாப்பா பிறந்திருக்கா? ஆம்! பிறந்திருக்கிறது! அதன்மேல் வீண் பழியும் விழுகிறது, தான் செய்த பிழையால்! பாவம்!' உள்ளே சரசரவென்று புகுந்துவிட்டான் மணி.

ஒரு கண்ணோட்டம்; அதற்குள், பல கவனித்தான் மணி.

அப்பா கூடத்தில் நாற்காலியில் அமர்ந்திருந்தார். ஒரு கை புத்தகத்தை - பஞ்சாங்கத்தை தாங்கியது. இன்னொரு கரம் குனிந்த தலையை தாங்கிக்கொண்டிருந்தது. ஒரு மாதிரி பரிதாபமாகத்தான் காட்சியளித்தார்.

பாட்டி சமையலறையிலிருந்து கையில் ஒரு பெரிய பாத்திரத்துடன் வந்துகொண்டிருந்தாள்.

இடதுபுறம் இருந்த அறையிலிருந்து ஒரு சிறு ஓசை; மருத்துவச்சி ஷண்முகம் ஏதோ பாட்டியைக் கேட்கபோலும் கதவருகே தோன்றினாள்.

"அம்மா! மவனாட்டமிருக்குதே!" ஷண்முகம் கூவினாள்.

"அட, மணியா?" அப்பா குரல்!

"அப்பனே, மணி! நீ தானேடா? பாட்டிக்குக் கண் மங்கல் சிறிது! மனதில் ஆர்வம் மிகுதி! அவள் கேள்வி அப்படி!"

"நிஜமாவா! ஸ்வாமி! பழனியாண்டவா - என் மனசு . . ." இது லக்ஷ்மியம்மாளின் மொழிதான்!

மனதும் உடலும் நொந்து போயிருந்த லக்ஷ்மியம்மாள் வேறு எப்படி மகிழ்ச்சியை வெளிக்காட்டுவாள்?

இந்த கோஷங்களுக்கிடையே மணி மாடிப்படி ஏறிவிட்டான்.

"அம்மா! நான் சொல்லல்லையா பையன் திரும்பி வருவான், எங்கேயும் போகமாட்டான்னு! நீ ஒரேமுட்டாப் பதறிப்போனயே! ரத்த பாசம் பாரு! இளுத்துண்டு வந்திடுச்சி! இந்தப் பச்சைக் குழந்தையை வசையேம்மா! இது தானே அண்ணனை கொணர்ந்திச்சி!" என்று ஷண்முகம் அம்மாவுக்குச் சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்டான் மணி.

'ஓகோ அப்படியா சேதி! இதா என்னைக் கூப்பிட்டது வீட்டுக்கு! அழகுதான்!' என்று நினைத்துக் கொண்டான்; ஆனால், உடனே, அப்பா அம்மாவை நேருக்கு நேர் எப்படிப் பார்ப்பது என்று கவலை எழுந்தது.

"உங்களுக்காக நான் வீட்டுக்கு திரும்பி வந்துவிடவில்லையாக்கும்! பாப்பாவைப் பார்க்கத்தான் வந்தேன்! அது பிறந்திருக்கும் என்று என் மனசுக்குத் தோன்றிற்று, வந்தேன்!" என்று காலையில் சொல்லிவிடலாம். அதுதான் சரி!' என்று ஒரு அசட்டு முடிவுக்கு வந்தான் மணி. பாவம்!

**********

(சுதேசமித்திரன். அக்டோபர் 3, 1948)